**செய்தி வெளியீடு எண்: 917** **நாள்: 13.12.2018**

**<u>புயல் மற்றும் மழைக்காலங்களில் பலத்த காற்று மற்றும் மழையிலிருந்து தென்னை, மா, பலா, முந்திரி உள்ளிட்ட தோட்டக்கலை மரங்களை காக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான வேளாண்மைத் துறையின் அறிவுரைகள்</u>**

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை காலத்தில் ஏறக்குறைய 50% மழை பெறப்படுவதோடு குறிப்பாக கடலோர மாவட்டங்கள் புயல் மற்றும் பெருமழையினால் கடும் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே, புயல் மற்றும் மழைக்காலங்களில் விவசாயிகள் அதிக பாதிப்புக்குள்ளாகும் தென்னை உள்ளிட்ட பல்வேறு பல ஆண்டுகள் பலன் தரும் தோட்டக்கலை மரங்களை பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ள வேண்டிய சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் விவரம் வருமாறு:-

- **<u>தென்னை மரங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்</u>:**
    - ❖ தென்னை மரங்களைப் பொறுத்தவரை மகசூல் தரும் தென்னை மரங்களில் தலைபாகத்தில் தேங்காய், இளநீர், பச்சை ஓலை, காய்ந்த ஓலை போன்றவை அதிகம் இருந்தால் காற்றின் வேகத்தினால் மரம் முழுவதும் அடியோடு சாய்வதற்கோ, முறிந்து விழுவதற்கோ வழிவகுக்கும். எனவே, இளம் ஓலைகளைத் தவிர்த்து, மீதமுள்ள பச்சை மற்றும் காய்ந்த மட்டைகள், இளநீர், தேங்காய் போன்றவற்றை வெட்டி அகற்றி விடுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனால், மரம் புயலைத் தாங்கி நிற்கும் வாய்ப்புகள் அதிகம்.
    - ❖ புயல், மழை போன்றவற்றை எதிர்கொள்ளவிருக்கும் நான்கு நாட்களுக்கு முன்பு விவசாயிகள் தென்னந்தோப்புகளுக்கு நீர்ப் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும். இதனால், தென்னையின்

வேர்ப்பகுதி மண்ணில் நன்றாக இறுகி மரம் சாய்ந்துவிடாமல் பாதுகாக்க உதவியாக இருக்கும்.

- ❖ தென்னை மர சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும், தென்னை காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டும். இதற்காக, 4 முதல் 15 வயதுடைய தென்னை மரங்களுக்கு காப்பீட்டுத் தொகையாக ஒரு மரத்திற்கு, ஆண்டிற்கு 2 ரூபாய் 25 பைசா விவசாயிகள் செலுத்தினால் போதுமானது. இதே போல, 16 முதல் 60 வயதுடைய தென்னை மரங்களுக்கு, காப்பீட்டுத் தொகையாக ஆண்டிற்கு ஒரு மரத்திற்கு, 3 ரூபாய் 50 பைசா விவசாயிகள் செலுத்தினால் போதுமானது. இது மொத்த காப்பீட்டுத் தொகையில் 25 சதவீதம் மட்டுமே. மீதமுள்ள 75 சதவீதத்தை மாநில அரசும், தென்னை வளர்ச்சி வாரியமும் வழங்குகின்றன. இயற்கை சீற்றம் மற்றும் பூச்சி நோய்களினால் பாதிக்கப்படும்போது, 4 முதல் 15 வயதுடைய காப்பீடு செய்யப்பட்ட தென்னை மரம் ஒன்றிற்கு இழப்பீட்டுத் தொகையாக 900 ரூபாய் வரையிலும், 16 முதல் 60 வயதுடைய தென்னை மரங்களுக்கு, மரம் ஒன்றுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1750/– வரையிலும் கிடைக்கிறது. எனவே, தென்னை விவசாயிகள் உடனடியாக அருகிலுள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலை அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு ஒவ்வோராண்டும் தவறாது காப்பீடு செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- **<u>மா, பலா, முந்திரி மற்றும் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்கள்</u>**:

  - ❖ புயல் காற்று வீசும் சமயம், காற்று மரங்களின் ஊடே புகுந்து செல்லும் வகையில், பக்கவாட்டுக் கிளைகளையும் அதிகப்படியான இலைகளையும் கவாத்து செய்து, மரம் வேரோடு சாய்ந்து விடுவதை

தடுக்கலாம். கவாத்து செய்த இடங்களில் பூஞ்சாண நோய் பரவாமல் தடுக்க காப்பர் ஆக்ஸிகுளோரைடு ஒரு லிட்டர் நீரில் 300 கிராம் கலந்த கலவை கொண்டு பூச வேண்டும்.

- ❖ தோப்புகளுக்கு நீர் பாய்ச்சுவதை இரண்டு நாட்களுக்கு முன்பே நிறுத்திவிடுவதன் மூலம் வேர்ப்பகுதி இறுகி மரம் காற்றில் சாயாமல் தடுக்கலாம்.
- ❖ உரமிடுதல் போன்ற பணிகளுக்காக மரத்தை சுற்றி பாத்தி கட்டுதல் போன்ற பணிகளை தற்சமயம் மேற்கொள்ளாமல், புயல் கடந்த பின் மேற்கொள்வது சிறந்தது.
- ❖ வாழைத் தோப்பினைச் சுற்றி வாய்க்கால் எடுத்து மழைநீர் தேங்காமல் வெளியேற வழிவகை செய்ய வேண்டும். வாழைப் பயிருக்கு அரசின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து வாழை விவசாயிகள் பயன் பெறலாம்.

- **<u>நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, நிலக்கடலை</u>** போன்ற பயிர்களுக்கு வயல்களில் மழை நீர் தேங்கியிருந்தால், தண்ணீரை வடித்து வடிகால் வசதியினை நன்றாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மேற்கண்ட பயிர்களுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து விவசாயிகள் பயன் பெறலாம்.

விவசாயிகள் மேற்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, பருவமழை காலத்தில் மழை மற்றும் காற்றின் பாதிப்பிலிருந்து பயிர்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**